மலர்-2 இதழ்-5

October 2025

BALA MANDIR

MALARUM MOTTUKKAL

www.kinshipcare.in www.balamandir.org



மலரும் மொட்டுக்கள்

- Bala Mandir Annual Day
- Festivals
- Kinship Care - Salem
- Kinship Care - Kanchipuram
- Parents Corner
- Young Achievers

BALA MANDIR
OCTOBER 2025

MALARUM MOTTUKKAL

www.balamandir.org
www.kinshipcare.in

பாலமந்திர் பள்ளி ஆண்டு விழா



23.08.2025 அன்று பாலமந்திர் பள்ளியின் ஆண்டு விழா சிறப்பாக நடைபெற்றது. தலைமை விருந்தினராக திருமதி பிரவீணா யக்னம்பாட், **(CHIEF OF STAFF & CSR LEADER, BOEING SOUTH ASIA)** பங்கேற்று விழாவை சிறப்பித்தார். மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. கல்வி, விளையாட்டு மற்றும் பிற துறைகளில் சாதனைகள் படைத்த மாணவர்களுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டன. குழந்தைகளிடம் அறிவியல் ஆர்வத்தை ஊக்குவிக்கும் நோக்கில் **போயிங் சுகன்யா STEM ஆய்வகம்** இந்நாளில் தொடங்கப்பட்டது. மாடல்கள், கிட்கள் மற்றும் டிஜிட்டல் கருவிகளுடன் அமைக்கப்பட்ட இந்த ஆய்வகம் செயல்முறை கற்றல் மூலம் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் கணிதத்தை அறிந்து கொள்ள உதவுகிறது. இது மாணவர்களின் சிந்தனை திறனை மேம்படுத்தவும், எதிர்காலத்தில் உயர்ந்த இலக்குகளை அடையவும் உதவும்.





டாக்டர் ரமா நாராயணன் அவர்கள் எழுதிய **"NURTURING BLOSSOMS"** நூல், பால மந்திரின் ஆண்டு விழாவில் வெளியிடப்பட்டது. இந்நூல், இந்தியாவில் ஆரம்பக் குழந்தை பராமரிப்பு மற்றும் வளர்ச்சித் துறையில் முக்கிய பங்காற்றிய மூன்று சிறந்த பெண்கள் ஸ்ரீமதி. எஸ். மஞ்சுபஷிணி, டாக்டர் அனந்தலக்ஷ்மி மற்றும் திருமதி ஜெயா கிருஷ்ணசுவாமி அவர்களின் சிறப்பான பணிக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

பண்டிகைகள்

ஆகஸ்ட் மாதம் முழுவதும் பால மந்திர் பண்டிகைகளாலும் கொண்டாட்டங்களாலும் கலகலத்தது! கிருஷ்ண ஜெயந்தி, விநாயகர் சதுர்த்தி, வரலக்ஷ்மி விரதம் மற்றும் சுதந்திர தினம் போன்ற விழாக்கள் பக்தி, உற்சாகம் மற்றும் தேசபக்தியுடனும் சிறப்பாக கொண்டாப்பட்டது. பால மந்திர் இல்லத்தை மலர்கள், தோரணங்கள், வண்ண கோலங்கள் மற்றும் பலூன்களால் குழந்தைகள் அலங்கரித்தனர்.

பாலமந்திர் சென்னை மற்றும் நாகர்கோவில் இல்லக் குழந்தைகள் சுதந்திர போராட்ட வீரர்களின் தியாகங்களை உணர்த்தும் விதமாக கலை நிகழ்ச்சிகளை சுதந்திர தினத்தன்று வழங்கினர்.





BALA MANDIR
OCTOBER 2025

MALARUM MOTTUKKAL

www.balamandir.org
www.kinshipcare.in

KNOW YOUR SOCIAL WORKER



ஓசூரை சேர்ந்த திருமதி சுகன்யா அவர்கள் மூன்று மாவட்டங்களுக்கு சமூகப்பணியாளராக பணியாற்றுகிறார். அவர் மைக்ரோபயாலஜியில் பி. எஸ்.சி மற்றும் மெடிக்கல் & சைக்கியாட்ரி துறையில் முதுநிலை பட்டம் பெற்றுள்ளார். ஆறு ஆண்டுகளுக்கும் மேலாக கவுன்சிலிங் அனுபவம் கொண்டவர். இரண்டரை ஆண்டுகள் பாலமந்திர் தத்தெடுப்பு பிரிவில் பணியாற்றிய இவர், கடந்த ஒரு வருடமாக கின்ஷிப் கேரில் பணி புரிந்து வருகிறார்.

அவரது திறன்கள் – மனநல பிரச்சினைகளை அடையாளம் காணுதல், குழந்தைகள் மற்றும் பெற்றோர்களின் உளவியல் நலத்தை மேம்படுத்துதல் மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கையை அவர்கள் நடத்த வழிகாட்டுதல்.





கின்ஷிப் கேர் முகாம்கள்

கின்ஷிப் கேர் பெற்றோர்கள் பாலமந்திரின் செயல்பாடுகளை அறிந்து கொள்ளவும், மேலாண்மை உறுப்பினர்களை நேரில் சந்தித்து உரையாடுவதற்காகவும் ஒவ்வோரு ஆண்டும் நேரடி கூட்டம் நடத்தப்படுகின்றது. பெற்றோர்கள் மற்றும் குழந்தைகளின் தேவைகளை புரிந்துகொள்ளவும் இது உதவுகிறது. இவ்வாண்டும் இம்முகாம்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றனர்.

கின்ஷிப் கேர் (KINSHIP CARE)



பாலமந்திரின் கின்ஷிப் கேர் திட்டம் தற்போது பல்வேறு மாவட்டங்களில் இருக்கும் **1091** குடும்பங்களில் இருந்து **1912** குழந்தைகளுக்கு ஆதரவு அளித்து வருகிறது

BALA MANDIR
OCTOBER 2025
MALARUM MOTTUKKAL
www.balamandir.org
www.kinshipcare.in

கின்ஷிப் கேர் - சேலம் நிகழ்வு



சேலம் மாவட்டம்- கின்ஷிப் கேரின் இரண்டாவது ஆண்டு சந்திப்பு **24** ஆகஸ்ட் **2025** அன்று சோனா பொறியியல் கல்லூரியில் வெற்றிகரமாக நடைபெற்றது. **40** குடும்பங்களிலிருந்து **146** உறுப்பினர்கள் உற்சாகமாக கலந்து கொண்டனர். முக்கிய விருந்தினராக சேலம் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் திரு. இந்திரஜித் பங்கேற்று, குழந்தைகளுக்கு பாதுகாப்பான மற்றும் ஆதரவான சூழலை உருவாக்கும் பாலமந்திரின் முயற்சியை வெகுவாக பாராட்டினார்.











பெற்றோர்கள், கின்ஷிப் கேர் வழங்கும் சேவைகளுக்காக நன்றி தெரிவித்தனர். சில பெற்றோர்கள், ஹாப்பி ரீடிங் மற்றும் ஹாப்பி மேத்ஸ் தன்னார்வலர்கள் மற்றும் மற்ற **KC** சேவைகள் குழந்தைகளின் முன்னேற்றத்தில் ஏற்படுத்திய மாற்றங்கள் குறித்து பேசினர்.

பெற்றோர்களுக்காக **"BLOCK CONNECT"** நடத்தப்பட்டது. இதன் முக்கிய நோக்கம், பகுதி வாரியாக அருகிலுள்ள தாய்மார்களுக்குள் பிணைப்பு உருவாகி, ஆதரவைவுயும் தகவல்களையும் பரிமாறி கொள்வதாகும். பெற்றோர்கள் குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு குழுவையும் சமூகப்பணியாளர்கள் வழிநடத்தினர். குழு உறுப்பினர்களுக்கிடையில் நல்ல இணக்கம் உருவாகி, அவர்கள் தங்கள் குழுக்களுக்கான பெயரையும் தலைவரையும் தேர்ந்தெடுத்தனர். இது தகவல்களைப் பகிரவும், ஒருவருக்கொருவர் ஆதரவு அளிக்கவும் பயனுள்ளதாக இருக்கும் என தாய்மார்கள் கருத்து தெரிவித்தனர். மேலும், குழு உறுப்பினர்கள் அவ்வப்போது சந்தித்து, இணைந்து செயல்பட ஊக்குவிக்கப்பட்டனர்.

BALA MANDIR
OCTOBER 2025

MALARUM MOTTUKKAL

www.balamandir.org
www.kinshipcare.in

அதே நேரத்தில், குழந்தைகளுக்காக பல்வேறு விளையாட்டுகள் ஏற்பாடு செய்யப்பட்டு, அவர்கள் அதில் மகிழ்ச்சியாக, உற்சாகத்துடன் கலந்து கொண்டனர். இவ்வாண்டு கூட்டம், குடும்பங்களை ஒருங்கிணைத்து அனுபவங்களைப் பகிரவும், பாதுகாப்பான குடும்ப வளர்ச்சியை உறுதி செய்யவும் ஒரு வாய்ப்பாக அமைந்தது. பெற்றோர்கள் புத்துணர்ச்சியுடனும், நம்பிக்கையுடனும் சென்றனர்.













கின்ஷிப் கேர் - காஞ்சிபுரம் நிகழ்வு

காஞ்சிபுரம் மாவட்டம்- கின்ஷிப் கேரின் இரண்டாவது ஆண்டு சந்திப்பு- **"METANOIA – மாற்றத்தின் பயணம் "** என்ற தீமில் **(THEME) 21** செப்டம்பர் **2025** அன்று சிறப்பாக நடைபெற்றது. மொத்தம் **80** குடும்பங்களைச் சேர்ந்த **180** பேர் உற்சாகமாக கலந்து கொண்டனர்.

KC குடும்பங்களை இணைத்து, அவர்களுக்கிடையேயான உறவை வலுப்படுத்தி, மாற்றத்தின் பயணத்தை கொண்டாடும் நோக்கத்துடன் நடைபெற்றது.













BALA MANDIR
OCTOBER 2025

MALARUM MOTTUKKAL

www.balamandir.org
www.kinshipcare.in



திருமதி உமா, **HR,** தன்னுடைய ஊக்கமூட்டும் பேச்சால் பெற்றோர்களை ஈர்த்தார். திருமதி சுஜாதா அவர்கள் கவுன்சிலிங் குறித்து பேசினார். பெற்றோர்கள் திரு நடராஜன் அவர்களிடம் தங்களின் அனுபவங்கள், கருத்துக்கள் மற்றும் **KC** திட்டம் தங்களின் வாழ்க்கையில் ஏற்படுத்திய நல்ல மாற்றங்களையும் பகிர்ந்தனர்.

சமூகப்பணியாளர் பெஞ்சமின் அவர்கள், மாற்றத்தின் பயணத்தை பிரதிபலிக்கும் விதமாக பாடல் பாடினார். பெற்றோரும் குழந்தைகளும் அவருடன் இணைந்து பாடி மகிழ்ந்தனர். திருமதி பிரியங்கா, சமூகப்பணியாளர், இன்முகத்துடன் அனைவரையும் வரவேற்று, **KC-**யின் சேவைகளை எடுத்துரைத்தார்.







அதே நேரத்தில், சமூகப்பணியாளர்கள் குழந்தைகளுக்காக பல விளையாட்டுகள் மற்றும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தனர். குழந்தைகள் மகிழ்ச்சியுடன் கலந்து கொண்டனர், அரங்கமே அவர்களின் சிரிப்பால் நிறைந்தது. மதிய உணவுக்குப் பிறகு, தைரியம் மற்றும் பொறுப்புணர்வை உணர்த்தும் "தி லயன் கிங்" **(THE LION KING)** திரைப்படம் திரையிடப்பட்டது.

BALA MANDIR
OCTOBER 2025

MALARUM MOTTUKKAL

www.balamandir.org
www.kinshipcare.in





பெற்றோர்கள் **"BLOCK CONNECT"** நிகழ்ச்சியில் ஆர்வமாக கலந்து கொண்டனர். இது வெவ்வேறு பகுதிகளிலிருந்து வந்த குடும்பங்கள் ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்ளவும், அனுபவங்களைப் பகிரவும், இணைந்து செயல்படவும், வலுவான சமூகப்பிணைப்பை உருவாக்க ஊக்குவிக்கும் விதமாக நடத்தப்பட்டது.





பெற்றோர் பகுதி

கடந்த மாதம் "நல்ல தொடுதல்" குறித்து விவாதித்தோம். இம்மாதம் "தவறான / பாதுகாப்பற்ற தொடுதல்" குறித்து தெரிந்துகொள்வோம்.

ஒரு தவறான தொடுதல் உங்களுக்கு அசௌகரியம், பயம் அல்லது குழப்பத்தை ஏற்படுத்தும். "தப்பிக்க வேண்டுமா அல்லது பயப்பட வேண்டுமா" என்ற நிலைக்கு கொண்டுசெல்லும். தவறான தொடுதல் என்பது ஒருவர் உங்களின் தனிப்பட்ட பகுதிகளை தொடுதல் அல்லது நீங்கள் அவருடைய உடல் பாகங்களை தொடுமாறு வற்புறுத்துதல் அல்லது அவருடைய தொடுதல் உங்களுக்கு அசௌகரியத்தை உண்டாக்கலாம்.
உங்களுக்கு தெரிந்தவராக இருந்தாலும், உங்களை சிரமத்திற்க்கு உள்ளாக்கும் தொடுதல் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல.




BALA MANDIR
OCTOBER 2025

MALARUM MOTTUKKAL

www.balamandir.org
www.kinshipcare.in





தவறான தொடுதலின் சில உதாரணங்கள்:

- தனிப்பட்ட பகுதிகளை தொடுதல் – நீச்சல் உடை போர்த்தும் பகுதிகளை யாராவது தொடுதல் அல்லது நீங்கள் தொடுமாறு கூறுதல்.
- ரகசிய தொடுதல் – "இதை யாரிடமும் சொல்லாதே" என்று யாராவது சொன்னால், அது எச்சரிக்கை சின்னம். நல்ல தொடுதலுக்கு ரகசியம் தேவையில்லை.
- வற்புறுத்தப்பட்ட தொடுதல் – நீங்கள் "இல்லை" என்றாலும் ஒருவர் உங்களை பிடித்து அணைத்தல் அல்லது வலுக்கட்டாயமாக தொடுதல்.
- தவறான நோக்கத்துடன் தொடுதல் – ஒருவர் தனிப்பட்ட புகைப்படங்களை காட்டுதல் அல்லது அவர்கள் உங்களை பாதுகாப்பற்றவாறு உணர்த்தினால்
- அசௌகரியமான தொடுதல் – யாராவது உங்களைப் பயமுறுத்தும் அல்லது காயப்படுத்தும் வகையில் தொடுதல்.



நமது நோக்கம் குழந்தைகளைப் பயமுறுத்துவது அல்ல, அவர்களை விழிப்புணர்வுடன் பாதுகாப்பாகவும் இருக்க கற்றுக்கொடுத்தல். இதை குழந்தைகளின் வயதுக்கேற்ப மற்றும் புரிந்துகொள்ளும் வகையில் எடுத்துரைக்கவும்.

YOUNG ACHIEVERS



ரேவந்த் சாய் (திருவள்ளூர்)
புத்தக சமநிலை போட்டி



ரீநிதி (நாமக்கல்) சிலம்பம் போட்டி



சந்தனா (நாமக்கல்)
கராத்தே போட்டி

BALA MANDIR
OCTOBER 2025
MALARUM MOTTUKKAL
www.balamandir.org
www.kinshipcare.in

YOUNG ACHIEVERS



நிகிதா ஏஞ்சல் பாலர்ட் சென்னை கராத்தே போட்டி



டிம்பிள் ஹசினி திருவள்ளூர் தேர்வுகளிலும் முதலிடம்.



ஸ்ரீநிதா (வேலூர்) பள்ளியில் நடைபெற்ற போட்டி



மணிமாறன் (நாமக்கல்) பேச்சு போட்டியில்



எஸ். சமேக்ஷா கராத்தே போட்டி



ஹெலினா (திருவள்ளூர்) யோகா போட்டி



நேஹா. பி (திண்டுக்கல்) பேச்சுப் போட்டி



கவின் (கடலூர்) ஸ்பெல் பீ போட்டி



தனுஸ்ரீ(கடலூர்) நீளத்தாண்டல் போட்டி